Registered with the Registrar of News Paper
For India under R.N.I. 11967/'67

வருட சந்தா ரூ.1/-

வருகையின் தூதன்

Those who turn the world upside down. Acts.17:6.

Vol. 68 தேவன் இல்லை என்று மதிகெட்டவன் தன் இருதயத்தில் சொல்லிக்கொள்ளுகிறான் சங்.14:1 மே 2022 No.5

ஒரு மறுமலர்ச்சியின் காலம்

A time of Refreshing

Robert Murray Mecheyne (1813-1843)

தாகமுள்ளவன் மேல் தண்ணீரையும் வறண்ட நிலத்தின் மேல் ஆறுகளையும் ஊற்றுவேன், உன் சந்ததியின் மேல் என் ஆவியையும் உன் சந்தானத்தின் மேல் என் ஆசீர்வாதத்தையும் ஊற்றுவேன். அதனால் அவர்கள் புல்லின் நடுவே நீர்க்கால்களின் ஓரத்திலுள்ள அலரிச் செடிகளைப் போல வளருவார்கள் ஏசா.44:34.

ஆத்துமாக்கள் புறாக்களைப் போலவும், மேகம் போலவும் ஆண்டவராகிய இயேசுவிடம் பறந்து வருவதையும், கூட்டம் கூட்டமாக மக்கள் பாதுகாவலின் பட்டணத்துக்கு ஓடி வருவதையும், பெற்றோர் தங்கள் பிள்ளைகளின் மனந்திரும்புதலால் மகிழ்வதையும், கணவன் புருஷனாலும் மனைவி புருஷனாலும் களி கூருவதையும் காணவேண்டுமானால் தேவன் தமது ஆவியை நம்மேல் ஊற்றவேண்டும். அது கிருபையின் கிரியையின் நாட்கள். 'என் ஆவியை ஊற்றுவேன்' என்பதின் ஆரம்பமும் முடிவும் அவரே.

தேவன் தமது ஜனத்தை விரிவடையச் செய்கிறார். சகரியா நான்காம் அதிகாரத்தில் சொல்லப்படும் ஒலிவ மரங்கள் முழுவதும் பொன்னால் செய்யப்பட்ட குத்துவிளக்கிற்கு தங்க மயமான ஒலிவ எண்ணெயைத் தங்களிலிருந்து அளித்தன. எண்ணெய் குறைவாக இருந்தால் விளக்கு மங்கி எரியும். எண்ணெய் நிரம்பியிருந்தால் விளக்கு பிரகாசமாக எரியும்.

தேவ பிள்ளைகளாகிய நீங்கள் விரிவடைய விரும்புகிறீர்களா? உங்கள் இருதயங்கள் சந்தோஷத்தால் நிரம்பவும், உதடுகள் துதியினால் நிறையவும், நதியினருகிலுள்ள அலரிச் செடிகளைப் போல நீங்கள் வளரவும் வேண்டுமா? தேவன் வாக்களித்த அவரது கிருபையின் செயலாகிய 'என் ஆவியை ஊற்றுவேன்' என்பதை நிறைவேற்ற வேண்டும். அவர் அல்பாவும், ஒமேகாவும், ஆதியும் அந்தமுமானவர்.

ஆவிக்குரிய தாகத்தின் அடையாளங்கள்

1. தேவ வசனத்தின் மீது அதிக தாகம்:

இருவர் ஒரு வனாந்தரத்தின் வழியாக பிரயாணம் செய்யும்போது தண்ணீரை அதிக வாஞ்சையோடு தேடுகிறவர்தான் அவர்களில் அதிக தாகமுள்ளவர் என்று கண்டறிய முடியும். இஸ்ரவேல் மக்கள் தங்கள் பிரயாணத்தில் ஏலீம் என்ற இடத்திற்கு வந்தபோது மிகுந்த சந்தோஷமடைந்தார்கள். ஏனெனில் அங்கே 12 நீரூற்றுகளும் 70 பேரீச்ச மரங்களுமிருந்தன.

தாகமுள்ள விசுவாசிகள் வேத வசனத்தை நேசித்து வாசித்து போதிப் பார்கள். அவர்களின் தாகம் பெருகிக் கொண்டே இருக்கும். விசுவாசிகளாகிய நீங்கள் இப்படியே இருக்க வேண்டும். இந்த ஆசீர்வாதத்தைப் பெற்ற பின்பு மக்கள் இன்னும் அதிகமாக வசனத்தைக் கேட்டுக் கொண்டேயிருக்க வாஞ்சிப் பார்கள்.

உங்களில் இந்த தாகம் குறைவாயிருந்தால் அது ஆபத்தான அடையாளமாகும். ஜெபக்கூடுகைகளில் உலகமக்கள் வசனத்தைக் கேட்க வராவிட்டால் நான் அதிசயப்படுவதில்லை. ஆனால் நீங்கள் அப்படியிருந்தால் என்னால் பொறுக்க முடிவதில்லை. எனது ஆத்துமா தனி இடத்தைத் தேடி உங்களது நிலைக்காகக் கண்ணீர் விட வேண்டியதாயிருக்கும். தேவ வசன பஞ்சம் வராதிருப்பதாக.

2. அதிக ஜெப வாஞ்சை

ஒரு சிறு குழந்தை தாயின் பாலுக்காக தாகம் ஏற்படும் போது அது அமைதியாயிருப்பதில்லை. தேவபிள்ளை தாகம் ஏற்படும் போது அமைதியாயிருக்க முடியாது. உடனே இரகசிய துரவண்டைக்குச் செல்லுவான். அங்கே கண்ணுக்குப் புலப்படாத ஜீவ தண்ணீரைப் பருகலாம். அப்போது இணைந்து ஜெபிக்கத் தூண்டப்படுவீர்கள். ஒரு பட்டணம் தண்ணீரில்லாமல் மக்கள் தாகத்தால் ஒருவர் முகத்தை இன்னொருவர் பார்த்துக் கொண்டிருப்பார்களா? ஒருவரோடொருவர் ஆலோசனை பண்ணிக் கிணறுகளை வெட்ட உதவி செய்வார்களல்லவா?

இப்போது பட்டணம் கிருபையிழந்து அதனால் ஆத்துமாக்கள் தாழ்ச்சியடைந்து மடிந்து கொண்டிருக்கிறார்கள். நீங்கள் செய்ய வேண்டியதென்ன? சேர்ந்து ஜெபிக்க வேண்டும். "அல்லாமலும் உங்களில் இரண்டுபேர் தாங்கள் வேண்டிக் கொள்ளப்போகிற எந்தக் காரியத்தைக் குறித்தாகிலும் பூமியிலே ஒருமனப்பட்டிருந்தால் பரலோகத்திலிருக்கிற என் பிதாவினால் அது அவர்களுக்கு உண்டாகுமென்று உங்களுக்குச் சொல்லுகிறேன்" மத்.18:19.

3. கிருபையில் வளரும் விருப்பம்:

சிலர் கிறிஸ்துவுக்குள் வந்தவுடன் திருப்தியடைந்து விடுகிறார்கள். அவர்கள் எதையும் வாஞ்சிப்பதுமில்லை கேட்பதுமில்லை. இது சரியல்ல. நீங்கள் தாகமுள்ளவர்களானால் மறுபடியும் பிறந்தாலும் இரட்சிப்பினைத் தேடிக் கொண்டேயிருப்பீர்கள்.

"சகோதரரே, அதைப் பிடித்துக் கொண்டேனென்று நான் எண்ணுகிறதில்லை. ஒன்று செய்கிறேன், பின்னானவைகளை மறந்து முன்னானவைகளை நாடி, கிறிஸ்து இயேசுவுக்குள் தேவன் அழைத்த பரம அழைப்பின் பந்தயப் பொருளுக்காக இலக்கை நோக்கித் தொடருகிறேன் பிலி.3:13-14.

தாகமாயிருக்கும் ஆத்துமாக்களுக்கு நான் சொல்லுவது : அன்புப் பிள்ளைகளே உங்கள் ஜெபத்திற்குப் பதிலாக உங்கள் வறண்ட நாவுக்கு முதல் துளி இரக்கத்தைக் கட்டளையிடுவாராக. "கர்த்தராகிய நான் அதைக் காப்பாற்றி, அடிக்கடி அதற்குத் தண்ணீர்ப் பாய்ச்சி ஒருவரும் அதை சேதப்படுத்தாதபடிக்கு, அதை இரவும் பகலும் காத்துக் கொள்வேன்" ஏசா.27:2-3.

பிரளயமும் அதன் விளைவுகளும்

கிறிஸ்தவர்களாகிய நாம் பெரு மழைக்காக ஜெபிக்கக் கற்றுக் கொள்ள வேண்டும். இது தேவ வசனம். அவர்

(3-ம் பக்கம் பார்க்க)

அறிவிப்புகள்

1. தயவுசெய்து, நீங்கள் பணம் அனுப்பும் ஒவ்வொரு தடவையும் உங்கள் **பத்திரிகை பதிவு எண்ணை** எழுத மறவாதேயுங்கள்.
2. நீங்கள் வங்கி வழியாக எங்கள் கணக்குக்கு பணம் அனுப்பின உடனேயே எங்கள் வங்கி கணக்கில் வந்துவிடும்; ஆனால் அதை யார் அனுப்பினார்கள் என்று தெரியாவிட்டால் உங்களுக்கு ரசீது அனுப்ப இயலாது, உங்கள் கணக்கில் வரவு வைக்கவும் முடியாது. எனவே வங்கி வழியாக பணம் அனுப்பினால் அன்றுதானே, **உடனே** தகவல் தாருங்கள்.
3. உங்களுக்கு வரும் பத்திரிகையின் முகவரியில் உங்கள் தொலைபேசி எண் அச்சிடப்படாதிருந்தால் தயவு செய்து **உடனே** எங்களுக்குத் தெரிவியுங்கள்.

மொபைல் : ***9543221008***
வாட்ஸ்அப் : ***9489740295***

வருகையின் தூதன்

ஆசிரியர்:
வெஸ்லி தேவதாசன்
(Former Editor : S.Devadason 1955 - 1999)

Advisory Board : D. StanlyJones, S. Thomas Ganesh, Christy Samuel, Christinal P.Mony

வருகையின் தூதன் ஊழியத்தை தினந்தோறும் உங்கள் ஜெபத்தினாலும், மாதந்தோறும் உங்கள் காணிக்கையினாலும் தாங்குங்கள்.

மாதந்தோறும் தபாலில்/வங்கியில் அனுப்ப இயலாதவர்கள் வருடத்திற்கு ஒரு முறை குறைந்தபட்சம் ரூபாய் 500 அனுப்புங்கள்.

ஆண்டவர் மேலும் அவருடைய வார்த்தையின் மேலும் அன்பு

Love for the Lord and His word

Rich Carmicheal

இக்காலத்தில் தேவ வசனம் அனைத்து நாடுகளிலும் கனவீனப்படுத்தப்படுவது துக்கமானது. சபைக்குள்ளிருந்து கொண்டே சிலர் வசனத்தைப் புரட்டுவதும், கலப்படம் செய்வதும் இன்னும் சிலர் முற்றிலும் அதைப் புறக்கணிப் பதும் நம்மால் காணமுடிகிறது. அதன் அடிப்படை போதனைகள் குறிப்பாக பரிசுத்த வாழ்வு எண்ணமற்றுப் போகிறது.

மனிதன் தோன்றிய காலத்திலிருந்தே தேவவசனம் பல்வேறு விதங்களில் தாக்கப்பட்டுள்ளது. தேவனுடைய வார்த்தையை அசட்டை பண்ணுவதே ஏவாளை வஞ்சிக்க சாத்தான் எடுத்துக் கொண்ட முயற்சி ஆதி.3:1-5 படிக்க.

பிசாசு இங்கு ஏவாளை வஞ்சிக்க கூறிய ஆலோசனை தேவனுடைய வார்த்தை நம்பக்கூடாதது என்பதுதான். இன்றும் அவன் தன் சேனைகளோடு தேவவசனத்தின் மதிப்பைத் தரந்தாழ்த்த செயல்பட்டுக் கொண்டிருக்கிறான்.

கடைசிக்கால வஞ்சனை

கடைசி நாட்களில் மக்கள் தேவனிடமிருந்தும் அவருடைய வசனத்திலிருந்தும் விலகிச் செல்வார்கள் என்று வேதம் நம்மை எச்சரிக்கிறது. "ஏனென்றால் அவர்கள் ஆரோக்கியமான உபதேசத்தைப் பொறுக்க மனதில்லாமல், செவித்தினவுள்ளவர்களாகி, தங்கள் சுய இச்சைகளுக்கேற்ற போதகர்களைத் தங்களுக்குத் திரளாக சேர்த்துக்கொண்டு, சத்தியத்துக்குச் செவியை விலக்கி, கட்டுக் கதைகளுக்கு சாய்ந்துபோகும் காலம் வரும்" 2 தீமோ.4:3,4.

"..... சிலர் வஞ்சிக்கிற ஆவிகளுக்கும், பிசாசுகளின் உபதேசங்களுக்கும் செவிகொடுத்து, விசுவாசத்தை விட்டு விலகிப் போவார்கள்" 1 தீமோ.4:1, 2 தீமோ.3:1-5 படிக்க.

உறுதியான ஒரு தீர்மானம்

நாம் அதிக கிரயம் செலுத்த வேண்டிய ஒரு தீர்மானம் எடுக்க வேண்டும். அது வேத வசனத்திற்கு ஒத்துப் போவதா யிருக்க வேண்டும். "..... வசனங்களின் சட்டத்தைக் கைக் கொண்டிரு" 2 தீமோ.1:13. நாம் கற்று நிச்சயித்தவைகளில் நிலைத்திருக்க வேண்டும் 2 தீமோ.3:14.

நாம் தேவனுக்கு உத்தமமாயிருப்பதுவே முக்கியம். நாம் தேவ வசனத்தைக் கைக்கொள்ளும் விதம், தேவனுக்குக் காண்பிக்கும் மரியாதையையும் அவரோடுள்ள நெருங்கிய உறவையும் பிரதிபலிக்கிறது. நாம் அவரை கனப்படுத்தி அவரில் அன்பு கூர்ந்தால் அவரது வசனத்தையும் கனப்படுத்தி அவரது கட்டளைகளுக்குக் கீழ்ப்படிவோம்.

கீழ்க்குறிப்பிடும் வேதபகுதிகள் கர்த்தர் மேலுள்ள நமது அன்பு, கனம் அவரது வார்த்தையின் மேலுள்ள கனம் ஆகியவற்றை வெளிப்படுத்துகின்றன.

"நீ உன் தேவனாகிய கர்த்தரிடத்தில் உன் முழு இருதயத்தோடும், உன் முழு ஆத்துமாவோடும், உன் முழுப் பலத்தோடும் அன்பு கூருவாயாக. இன்று நான் உனக்குக் கட்டளையிடுகிற இந்த வார்த்தைகள் உன் இருதயத்தில் இருக்கக்கடவது. நீ அவைகளை உன் பிள்ளைகளுக்கு போதித்து, நீ உன் வீட்டில் உட்கார்ந்திருக்கிறபோதும், வழியில் நடக்கிற போதும், படுத்துக்கொள்கிறபோதும், எழுந்திருக்கிறபோதும் அவைகளைக் குறித்துப் பேசி ....." உபா.6:5-7. "இப்போதும் இஸ்ரவேலே, நீ உன் தேவனாகிய கர்த்தருக்குப் பயந்து, ... வேறே எதை உன் தேவனாகிய கர்த்தர் உன்னிடத்தில் கேட்கிறார்" உபா.10:12-13.

"கர்த்தருக்குப் பயப்படுதலே ஞானத்தின் ஆரம்பம், அவருடைய கற்பனைகளின்படி செய்கிற யாவருக்கும் நற்புத்தி உண்டு; அவர் புகழ்ச்சி என்றைக்கும் நிற்கும்" சங்.111:10.

"காரியத்தின் கடைத்தொகையைக் கேட்போமாக, தேவனுக்குப் பயந்து அவர் கற்பனைகளைக் கைக்கொள், எல்லா மனுஷர் மேலும் விழுந்த கடமை இதுவே" பிர.12:13.

இயேசு அவனுக்கு பிரதியுத்தரமாக : ஒருவன் என்னில் அன்பாயிருந்தால், அவன் என் வசனத்தைக் கைக்கொள் ளுவான், அவனில் என் பிதா அன்பாயிருப்பார்; நாங்கள் அவனிடத்தில் வந்து அவனோடே வாசம் பண்ணுவோம்" யோவா.14:23.

"அவருடைய கற்பனைகளை நாம் கைக்கொள்ளு கிறவர்களானால், அவரை அறிந்திருக்கிறோமென்பதை அதினால் அறிவோம்" 1 யோவா.2:3.

நாம் ஆண்டவருக்கு சொந்தமானால், அவருடைய வார்த்தையை கனப்படுத்தி அதற்குக் கீழ்ப்படிவோம். இந்நாட்களில் கலாச்சாரத்திற்கு அது சவாலாயிருக்கலாம். ஆயினும் அழுத்தங்களின் மத்தியிலும் நமது விசுவாசம் ஆண்டவரில் உறுதியாயிருப்பதையும் நிரூபிக்க முடியும். எந்த சூழலிலும் தேவனுக்கு உண்மையாயிருக்கவும், அவருடைய வார்த்தையில் நிலைத்திருக்கவும் நம்மை அவர் கரங்களில் ஒப்படைப்போம்.

இருதயத்தை ஆராய்ந்து பார்க்கும் தேவனுடைய வார்த்தை

The heart searching word of God

Andrew Murray (1828-1917)

தேவனுடைய வார்த்தை விதைக்கு ஒப்பானது. அதற்கு அளிக்கப்படும் முக்கியத்துவத்திற்கு ஏற்ப அதன் வளர்ச்சி ஏற்படும். சிலர் புரிந்து கொள்ளுதலின் அடிப் படையில் வசனத்தை ஏற்றுக் கொள்கிறார்கள். அது

(8-ம் பக்கம் பார்க்க)

கடிதம், மணியாடர், கொரியர் அனுப்ப வேண்டிய முகவரி:

வருகையின் தூதன்
நியுபோர்ட் தெரு,
நாகர்கோவில் – 629 001.
Ph. : 95432 21008

VARUKAYIN THOOTHAN
Newport Street,
Nagercoil-629 001.
Ph. : 95432 21008

காசோலை *(Cheque & Draft)*
வெஸ்லி தேவதாசன் (WESLEY DEVADASON)
என்ற பெயர் மட்டும் எழுதி அனுப்புங்கள்

வங்கி வழியாக காணிக்கை அனுப்புவோர்
உடனே எங்களுக்கு SMS அனுப்புங்கள்
Mobile : 95432 21008, 9489740295, e-mail:varukayinthoothan@hotmail.com

பத்திரிகை பணி
A/c. Name : **WESLEY DEVADASON**, A/c. No. : **2131010118439**
Punjab National Bank, Nagercoil -1. IFSC Code : **PUNB0213120**

வருகையின் தூதன் உபவாச ஊழியம்
A/c. Name : **WESLEY DEVADASON**, A/c. No. : **370601000002557**
I.O.B., Nagercoil-1 IFSC Code : **IOBA0000063**

முன்னேற்றப்பணி
A/c. Name : **WESLEY DEVADASON**, A/c. No. : **61822200136904**
Canara Bank, Ngl-1 IFSC Code : **CNRB0001110**

(1-ம் பக்க தொடர்ச்சி)

பெருமழையை அனுப்பயிருக்கும்போது துளிகளைக் கேட்கவேண்டாம். அவர் பெருமழையை அனுப்பும்போது நடை பெறுவது என்ன? இரட்சிக்கப்படும் ஆத்துமாக்கள் புல்லைப்போல் செழிப் பார்கள் சங்.72:16. அனேகர் விழிப் படைவார்கள். அநேகர் இரட்சிப் படைவார்கள். இப்போது கிறிஸ்துவின் ஜனங்கள் அனேக முட்களுக்கிடையில் காணப்படும் லீலிமலரைப் போலிருக் கிறார்கள். ஆனால் கிருபையின் காலத்தில் அவர்கள் புல்லைப்போல் செழிப்பார்கள். மழைக்குப் பின்பு துளிர்த்து வரும் புல்லின் துளிர்கள் பிரகாசிப்பதுபோல அனேகர் கிறிஸ்து வின் பிள்ளைகளாக எழும்புவார்கள்.

விடியற்காலையில் பூமியி லிருந்து எழும்பும் பனித்துளிகளை எண்ணமுடியாது. அவை காலை சூரிய ஒளியில் முத்துக்களைப் போல பிரகாசிக் கும். அதுபோல அவரது வல்லமையின் நாளில் கிறிஸ்துவின் ஜனம் காட்சி யளிக்கும். இரவின் இருண்ட வானில் ஆபிரகாம் பார்த்தபோது நட்சத்திரங்கள் மின்னிமின்னி பிரகாசித்தன. நீங்களும் பாருங்கள், அவற்றை எண்ணமுடியாது! பூமியின் தூளை எண்ண முடியாதே. ஆவியானவர் ஊற்றப்படும்போது இஸ்ரவேலரின் எண்ணிக்கையும் இப்படி யாகவேயிருக்கும்.

ஜெப வீரர்களே, ஆவியானவர் ஊற்றப்படும்படி ஜெபியுங்கள். ஆண்ட வரை நோக்கிக் கூப்பிடுகிற அனேகர் எழும்பட்டும்.

1. விசுவாசிகள் அலரிச் செடிகளைப் போல வளருவார்கள்:

தேவபிள்ளைகள் வளர்ச்சி குன்றிய நிலையிலிருப்பது துக்கமானது. அவர்கள் முன்னேறிச் செல்வதையும், அவர்கள் ஓட்டப்பந்தயத்திலிருப்பதை யும் நாம் காணமுடியவில்லை. கடந்த ஆண்டிலிருந்த அதே பலவீனம், குளிர்ந்த நிலைதான் காணப்படுகிறது, வளர்ச்சி யில்லை.

ஆனால் வேதவசனத்தின்படி ஆவியானவர் ஊற்றப்படும்போது தேவ பிள்ளைகள் அலரிச் செடிகளைப் போல வளருவார்கள். அலரிச் செடி இரவும் பகலும் வளரக்கூடியது. எப்போதும் புதிய கிளைகளை ஏற்படுத்திக் கொண்டு வளர்ந்து கொண்டேயிருக்கும். அதை வெட்டினாலும் மறுபடியும் துளிர்த்து வளரும்.

உங்கள் வாழ்விலும் ஆவியின் மாரி பொழியும்போது நீங்களும் வளர்ந்து கொண்டேயிருப்பீர்கள். உலக கவலைகளை ஒதுக்கிவிட்டு அதிகமாகத் துதிக்கவும் கூடும். உங்கள் இருதயங்களில் அதிக மாற்றங்கள் ஏற்படும். உலகம், பிசாசு, மாம்சம் ஆகியவற்றின் மேல் வெற்றி பெறுவீர்கள். உங்கள் வாழ்வு வேறுபட்டதாயிருக்கும். துன்பங்கள் மத்தியிலும், இனிய அர்ப்பணத்தோடு தாழ்மையுடனும் சாந்தத்துடனும் வாழு வீர்கள்.

2. சுய அர்ப்பணம் காணப்படும்:

"ஒருவன் நான் கர்த்தருடைய வன் என்று சொல்லுவான்". விசுவாசி தான் முழுவதும் கர்த்தருடையவன் என்று சொல்லுவது எத்தனை மகிழ் வானது! மறுமலர்ச்சி ஏற்படும் போது எல்லாம் கர்த்தருடையவைகளாகி விடு கின்றன. பெந்தேகோஸ்தே நாளிற்குப் பிறகு விசுவாசிகள் முதலாவது தங்களைக் கர்த்தருக்கு ஒப்படைத்தார்கள். ஆதிகால பரிசுத்தவான்களின் வாழ்க்கையிலும் இதே அனுபவம் காணப்பட்டது.

"இன்று நான் கர்த்தருக்கு முன்பாக நின்றிருந்தேன். எனக்குள்ள யாவற்றையும் தேவனுக்குக் கொடுத்து விட்டேன். எவ்விதத்திலும் நான் எனக் குரியவனல்ல. ஏனெனில் எல்லா உரிமை யையும் அர்ப்பணித்துவிட்டேன். என் சரீரமோ, அதின் எந்த உறுப்போ எனக்குச் சொந்தமல்ல. எனது நாவு, கரங்கள், கால்கள், கண்கள், காதுகள் எல்லாவற்றையும் முற்றிலுமாக அவருக்கே அளித்துவிட்டேன்" என்று எட்வர்ட்ஸ் என்ற பக்தன் கூறுகிறார்.

உங்களை முற்றிலும் தேவனுக்கு அளிப்பதின் சந்தோஷம் உங்களுக்குத் தெரியுமா? நீங்கள் உங்களை வைத்துக் கொண்டிருக்க முடியாது. இன்றே உங்களை முற்றிலும் தேவனுக்கு அர்ப் பணியுங்கள். அவருடைய கரத்தைத் தஞ்சமாக்குங்கள். சிறுவர்களும் பெரிய வர்களும் அனைவரும் 'நான் முற்றிலும் அவருடையவன்/ள்' என்று உறுதி கொள்ளுங்கள்.

ஒரு தாழ்மையான வீட்டாருக்காக விண்ணப்பங்கள்

Prayers for a humble household

Kim Butts

ஒவ்வொரு தனி மனிதனுக்கும், மனுஷிக்கும், குழந்தைக்கும், ஒட்டு மொத்த குடும்பத்திற்கும் தேவன் வைத்திருக்கும் திட்டம் தாழ்மை என்றால் தவறல்ல. தாழ்மையின் மூலம் கிறிஸ்தவர்கள் அடங்கி வாழவும் தேவனுக்குக் கீழ்ப்படியவும் ஆகவே பரிசுத்தமாய் வாழவும் சாத்தியமாகிறது.

நமது தனிப்பட்ட வாழ்விலும், குடும்ப வாழ்விலும் காணப்படும் மிகப்பெரிய பாவம் பெருமை. பெருமையால் விவாதங்கள், உறவு முறிவுகள் போன்ற பாவமான நடபடிகள் தோன்றி இறுதியாக மரணத்தை விளை விக்கின்றன. பெருமையானது தேசங் களையும் ராஜ்யங்களையும், வல்லமை யான மனிதரையும் விழச் செய்து விடுகிறது. அது குடும்பங்களை அழித்து விடுகிறது.

ஆனால் தாழ்மை கர்த்தருக்குப் பிரியமானது. "ஆகிலும் சிறுமைப்பட்டு, ஆவியில் நொறுங்குண்டு, என் வசனத் துக்கு நடுங்குகிறவனையே நோக்கிப் பார்ப்பேன்" ஏசா.66:2. அவருக்கு முன்பாகத் தாழ்மைப்படுகிறவர்களுக்கு அவர் மிகப்பெரிய வாக்குத்தத்தங்களை வைத்திருக்கிறார். "சாந்த குணமுள்ள வர்களை நியாயத்திலே நடத்தி சாந்த குணமுள்ளவர்களுக்குத் தமது வழியைப் போதிக்கிறார்" சங்.25:9. தமது வழிகளை தேவன் நமக்குப் போதிப்பது எத்தனை மகத்துவமானது!

சங்கீதம் 51-ஐ ஜெபிப்போம் ஒரு தாழ்மையான வீட்டாருக்காக ஜெபிப்பது எப்படி?

அரசன் தாவீது, 'என் இருதயத் துக்கு ஏற்றவன்' என்று தேவனால் நற்சாட்சி பெற்றவன். ஆயினும் கொடிய பாவம் ஒன்றை செய்தபோது தன்னைத் தாழ்த்தினான். ஆண்டவருக்கு முன்பாக மன்னிப்பைக் கேட்டான். எனவே மறுபடியும் வாழ்வு பெற்றான். தேவனு டைய கிருபையைப் பெற்றுக் கொண் டான். அவனது மாற்றத்திற்கும், திரும்பு தலுக்கும் காரணமான ஆழமான பாவ உணர்வு நமக்கு எடுத்துக்காட்டாயிருக் கிறது.

தேவபிள்ளைகள் பாவம் செய்யும்போது விரைவாக கர்த்தருக்கு முன்பாக வந்து மனந்திரும்புவதால் தங்கள் வாழ்வு எதிரியிடம் சாயாதபடி தடுக்கமுடியும். பாவம் செய்யும்போது சங்கீதம் 51-ஐ படித்து ஜெபித்து எப்படி பாவத்திலிருந்து சுத்திகரிக்கப்பட்டு தாழ்மையின் ஆவியைப் பெறமுடியும் எனக் கற்றுக்கொள்வோம்.

வசனம் 1 : "தேவனே உமது கிருபையின் படி எனக்கு இரங்கும், உமது மிகுந்த இரக்கங்களின்படி என் மீறுதல்கள் நீங்க என்னை சுத்திகரியும்". பிதாவே எங்கள் வாழ்வின் பாவநிலையை நாங்கள் உணருகிறோம். நாங்கள் எங்கள் பாவங் களையெல்லாம் அறிக்கையிட்டால் நீர் இரக்கத்தால் எங்களை மன்னிக்க வாக்குப் பண்ணியிருக்கிறீர். இயேசு எங்களுக்காக பலியாக மாண்டபடியால் உமது வாக்கின்படி நாங்கள் மன்னிக்கப் படுகிறோம். உமது உருக்கமான இருதய திற்காகவும், மாறாத அன்புக்காகவும் நன்றி செலுத்தி உம்மைத் துதிக்கிறோம்.

வசனம் 2 : "என் அக்கிரமங்களை நீக்கி, என்னை முற்றிலும் கழுகி என் பாவமற என்னைச் சுத்திகரியும்". கிருபை நிறைந் தவரே, நீர் எங்களை முற்றிலும் கழுவி னால் மட்டுமே நாங்கள் மறுபடியும் பிறந்த புதுவாழ்வை ஆரம்பிக்க முடியும்.

வசனம் 3 : "என் மீறுதல்களை நான் அறிந்திருக்கிறேன்; என் பாவம் எப்பொ முதும் எனக்கு முன்பாக நிற்கிறது". பிதாவே இப்போது நாங்கள் எங்கள் பாவங்களை உம்மிடம் அறிக்கையிடுகி றோம். எங்கள் பாவங்களால் உம்மை விசனப்படுத்தி, தூய ஆவியானவரை துக்கப்படுத்தினோம் என்பதை உணர உதவி செய்யும். வரும் நாட்களில் அவை களைச் செய்யாதிருக்க பெலப்படுத்து வீராக.

(4-ம் பக்கம் பார்க்க)

(3-ம் பக்க தொடர்ச்சி)

வசனம் 4 : "தேவரீர் ஒருவருக்கே விரோதமாக நான் பாவஞ்செய்து உமது கண்களுக்கு முன்பாகப் பொல்லாங் கானதை நடப்பித்தேன். நீர் பேசும் போது உம்முடைய நீதி விளங்கவும், நீர் நியாயந்தீர்க்கும்போது உம்முடைய பரிசுத்தம் விளங்கவும் இதை அறிக்கை யிடுகிறேன்." ஆண்டவரே, நாங்கள் உமக்கு விரோதமாகப் பாவஞ்செய்து விட்டோம், மனம் வருந்தி இப்பொழுது மனந்திரும்ப விரும்புகிறோம்.

வசனம் 5 : "இதோ துர்குணத்தில் நான் உருவானேன். என் தாய் என்னைப் பாவத்தில் கர்ப்பம் தரித்தாள்". நாங்கள் பாவ தன்மையோடு பிறந்தோம் என்றும் உம்முடைய மீட்பின் கிருபையால் மட்டுமே பாவத்திலிருந்து விடுபட்டு மன்னிப்பைப் பெற முடியும் என்று அறிகிறோம்.

வசனம் 6 : "இதோ, உள்ளத்தில் உண்மையிருக்க விரும்புகிறீர்; அந்த கரணத்தில் ஞானத்தை எனக்குத் தெரியப்படுத்துவீர்". பரம தந்தையே, எங்களுக்கு ஞானம் தந்து, உமது சத்தியத்தை எங்கள் இருதயத்தின் ஆழமான பகுதியில் வைப்பதால் நாங்கள் எது சரி எது தவறு என்பதை அறிந்து கொள்வோமாக.

வசனம் 7 : "நீர் என்னை ஈசோப்பினால் சுத்திகரியும், அப்பொழுது நான் உறைந்த மழையிலும் வெண்மையாவேன்". எங்கள் பாவங்கள் மிகவும் அழுக்கா னவை. ஆண்டவரே நீர் அவற்றைக் கழுகி எங்களை மறுபடியும் புதிதாக்க உம்மால் கூடும். நான் உறைந்த மழையிலும் வெண்மையாக விரும்புகிறேன்.

வசனம் 8 : "நான் சந்தோஷமும் மகிழ்ச்சியும் கேட்கும்படி செய்யும். அப்பொழுது நீர் நொறுக்கின எலும்பு கள் களிகூரும்". தமது மன்னிப்பின் மூலம் எங்களை சந்தோஷத்தால் நிரப்பும். எங்கள் பாவங்களால் நாங்கள் இன்னும் பாவமடையாதபடி எங்களை விடுவிப்பீ ராக.

வசனம் 9 : "என் பாவங்களைப் பாராத படிக்கு நீர் உமது முகத்தை மறைத்து, என் அக்கிரமங்களையெல்லாம் நீக்கி யருளும்". அன்பின் தேவனே, உமது பாதைகள் எவ்வளவு அதிசயமானவை கள்! எங்கள் பாவங்களையெல்லாம் மன்னித்து மிகவும் அற்புதமான செயல் களை எங்களுக்குச் செய்கிறீர்.

வசனம் 10 : "தேவனே, சுத்த இருதயத்தை என்னிலே சிருஷ்டியும், நிலைவரமான ஆவியை என்னிலே புதுப்பியும்." பிதாவே, ஆண்டவராகிய இயேசுவைப் போல பரிசுத்தமாக்கும். நாங்கள் பாவத்தில் விழுந்துவிடாதபடி உமது வசனத்தில் உறுதியாயிருப் போமாக.

வசனம் 11 : "உமது சமூகத்தை விட்டு என்னைத் தள்ளாமலும், உமது பரிசுத்த ஆவியை என்னைவிட்டு எடுத்துக் கொள்ளாமலும் இரும்". கிறிஸ்துவின் அன்பைவிட்டு எதுவும் எங்களைப் பிரிக்காது என்று நாங்கள் அறிவோம். உமது தூய ஆவியானவர் எப்போதும் எங்கள் ஆசிரியராயிருந்து சரியான பாதையில் வழிநடத்துவாராக.

வசனம் 12 : "உமது இரட்சண்ணியத்தின் சந்தோஷத்தைத் திரும்பவும் எனக்குத் தந்து, உற்சாகமான ஆவி என்னைத் தாங்கும்படி செய்யும்". அற்புதமான ஆண்டவரே, எங்கள் பாவத்தை எங்களுக்கு மன்னித்துவிட்டீர், அவற்றை மறந்துவிட்டீர். நாங்களும் பிறருக்கு மன்னிக்க உதவிசெய்யும். இந்த அற்புதமான ஈவை இயேசுவின் மூலம் தந்தபடியால் ஒவ்வொரு நாளும் நாங்களும் ஆசீர்வதிக்கப்படுகிறோம்.

வசனம் 13 : "அப்பொழுது பாதகருக்கு உமது வழிகளை உபதேசிப்பேன், பாவி கள் உம்மிடத்தில் மனந்திரும்புவார்கள்". அறுவடையின் கர்த்தாவே, இழந்து போன ஆத்துமாக்களைக் கண்டுபிடிக்க வும், உமக்கு முதுகைத் திருப்பினவர் களிடம் எங்கள் சாட்சியை சரியான முறையில் பகிர்ந்து கொள்ளவும், அதன் மூலம் தேவன் எங்களுக்குச் செய்த நன்மைகளை அவர்களுக்கும் செய்வார் என்று எதிர்பார்க்கவும் உதவி செய்யும்.

வசனம் 14 : "தேவனே, என்னை இரட்சிக்கும் தேவனே, இரத்தப் பழிகளுக்கு என்னை நீங்கலாக்கி விடும்; அப்பொழுது என் நாவு உம்முடைய நீதியைக் கெம்பீரமாய் பாடும்." தேவனே நீர் எங்களை இரட்சித்தபடியால் உமது மிகப் பெரிய அன்பைப் பிறரிடம் பகிர்ந்து கொள்வோமாக.

வசனம் 15 : "ஆண்டவரே, என் உதடு களைத் திறந்தருளும்; அப்பொழுது என் வாய் உம்முடைய புகழை அறிவிக்கும்". சர்வ வல்ல ஆண்டவரே, நீர் செய்த வைகளை மற்றவர்களுக்கு அறிவிக்க எங்களுக்கு தைரியம் தாரும். நாங்கள் உமது வல்லமையுள்ள நாமத்திற்கு எப்போதும் ஸ்தோத்திரம் செலுத்து வோமாக.

வசனம் 16 : "பலியை நீர் விரும்புகிற தில்லை, விரும்பினால் செலுத்துவேன், தகனபலியும் உமக்கு பிரியமானதல்ல".

கிறிஸ்து சிலுவையில் தம்மைப் பலியாக ஒப்புக்கொடுத்தபடியால் இப்போது நீர் சரீர பிரகாரமான பலியை விரும்புகிறதில்லை என்பதை அறிவோம். ஆண்டவரே நீர் விரும்புவது எங்கள் தாழ்மையும் கீழ்ப்படிதலுமே. இவற்றை எங்கள் காணிக்கையாகப் படைக்க உதவி செய்யும்.

வசனம் 17 : "தேவனுக்கேற்கும் பலிகள் நொறுங்குண்ட ஆவிதான். தேவனே, நொறுங்குண்டதும், நருங்குண்டது மான இருதயத்தை நீர் புறக்கணியீர்".

ஆண்டவரே உமக்கு முன்பாக எங்கள் இருதயங்களைத் தாழ்த்து கிறோம். அப்போது நீர் எங்களை உமது குமாரனாகிய கிறிஸ்துவின் சாயலுக் கொப்பாக உருவாக்குகிறீர். துன்பங்கள் வரும்போது உம்மையே நம்ப கிருபை செய்யும். நாங்கள் கீழ்ப்படியாமை காண்பிக்கும்போது நாங்களே விரைவாக வந்து உத்தம பாவ அறிக்கை செய்து அவற்றை விட்டுவிட்டு உம்மை அதிகமதி கமாய்க் கிட்டிச் சேர்வோமாக.

பிள்ளைகளும் வேதவசனமும்

Children and Scripture

Andrew Murray

"அந்த விசுவாசம் முந்தி உன் பாட்டியாகிய லோவிசாளுக்குள்ளும், உன் தாயாகிய ஐனிக்கேயாளுக்குள்ளும் நிலைத்திருந்தது. அது உனக்குள்ளும் நிலைத்திருக்கிறதென்று நிச்சயித்திருக்கி றேன்" *2 தீமோ.1:5.*

"நீ கற்று நிச்சயித்துக் கொண்ட வைகளில் நிலைத்திரு; அவைகளை இன்னாரிடத்தில் கற்றாய் என்று நீ அறிந்திருக்கிறதுமல்லாமல், கிறிஸ்து இயேசுவைப் பற்றும் விசுவாசத்தினாலே உன்னை இரட்சிப்புக்கேற்ற விசுவாச முள்ளவனாக்கத்தக்க பரிசுத்த வேத எழுத்துக்களை, நீ சிறுவயதுமுதல் அறிந்தவனென்று உனக்குத் தெரியும்" *2 தீமோ.3:14-15.*

விசுவாசமுள்ள பெற்றோர், தங்கள் பிள்ளைகளுக்கு தேவ வசனத் தைப் பகிர்ந்தளிப்பது தேவன் அவர் களுக்களித்த மேன்மையான கனமாகும். பெற்றோருடைய மாயமற்ற விசுவாசம் வசனத்தின்படி பிள்ளைகளில் நிலைத் திருக்கிறது. தனிப்பட்ட சாட்சி அனுபவம் ஆகியவற்றின் வலிமையால் பிள்ளையின் விசுவாசம் விழிப்படையும். உத்தம விசுவாசம் தொற்றும் தன்மை யுடையது. ஆவியின் ஜீவன் அதன் மூலம் ஊதப்படுகிறது. தேவ வசனம் ஆசீர் வாதமாக அமைகிறது. இவற்றை மனதில் கொண்டு பிள்ளைகளுக்குப் போதி யுங்கள்

வசனத்தை அவர்கள் விசுவாசிக்கட்டும்

முற்காலத்திலிருந்தே தமது பரிசுத்தவான்கள் எல்லாவற்றிற்கும் மேலாக விசுவாச வீரர்களாய் திகழ தேவன் விரும்பினார். விசுவாசம் என்பது தேவன் சொல்லுவதைக் கேட்பதும், அவர் கொடுப்பதைப் பெற்றுக் கொள் வதும், அவர் செய்வதை ஏற்றுக் கொள் வதுமான ஆத்தும அர்ப்பணமாகும். தேவனிடத்திலுள்ள விசுவாசம் அவரது வார்த்தையை விசுவாசிப்பதில் ஆரம்ப மாகிறது. தேவன் கூறும் யாவற்றையும் ஏற்றுக்கொள்ளும் தன்மையைப் பிள்ளை களிடம் உருவாக்குவது பெற்றோரின் கடமை.

தேவன் தமது அன்பினால் தமது குமாரனை ஈவாக அளித்ததும், அவர் மூலம் நமக்கு கிடைக்கும் வாழ்வு ஆகியவை நமது விசுவாசம் அவரது வார்த்தையை உறுதியாய் நம்பும்போது

(5-ம் பக்கம் பார்க்க)

(4-ம் பக்க தொடர்ச்சி)

அவை உண்மையாக வெளிப்படும் வாக்குத்தத்தங்களையும், சத்தியங்களையும் விசுவாசத்திற்கு பயன்படுத்தி வாழ்வை உறுதிப்படுத்த வேண்டும் என போதிக்க வேண்டும். பிள்ளைகள் எளிதில் நம்பிக்கை கொள்ளக்கூடியவர்கள். அவர்கள் ஒருபோதும் மாறாத வேத வசனங்களை நம்பச் செய்யுங்கள். உங்கள் மாயமற்ற விசுவாசம் அவர்களை இந்த தொடர்புக்குக் கொண்டு வரட்டும்.

வசனத்தை அறிந்து கொள்ளட்டும்

விசுவாசம் அறிந்து கொள்வதைச் சார்ந்தது. தீமோத்தேயு பரிசுத்த வேத எழுத்துக்களை அறிந்தபடியால் இரட்சிப்புக்கேதுவான ஞானத்தைப் பெற்றான் 2 தீமோ.3:14-15. தேவ கிருபை நம்மை இரட்சிக்க நாம் போதிக்கப்பட வேண்டும். அந்த ஞானம் பரத்திற் குரியது. நாம் தேவனை உள்ளத்தாலும் இருதயத்தாலும் நேசிக்க வேண்டும். தேவன் வெளிப்படுத்திய இரட்சிப்பின் சத்தியங்களை பெற்றோர் தெளிவாகவும் புத்தியோடும் அளிக்க வேண்டும். இந்தப் பணியை வேறு எவரிடமும் ஒப்படைக்கக்கூடாது. குடும்ப ஆராதனைகளில் தேவவசனம் போதிக்கப்பட வேண்டும்.

வேத புத்தகத்திலுள்ள சத்தியங்கள் சரித்திரபூர்வமானவை மட்டுமல்ல, அவை தேவன் சொல்லியவையாகும் என்பது அவர்கள் மனதில் பதிக்கப்பட வேண்டும். கற்றுக்கொடுக்கப்படும் வசனங்கள் அடிக்கடி சொல்லப்படுவ தால் மனதில் ஆழமாகப் பதிந்துவிடும். வேதபுத்தகத்தை அறிந்து கொள்ளவும் அதோடு நெருங்கிய உறவு கொள்ளவும் அது ஆசீர்வாதமானது என்ற சிந்தை உருவாக்கப்பட வேண்டும்.

வசனத்தை நேசிக்கட்டும்

இது சற்று கடினமானது. வசனத்தை அறிந்து, விசுவாசம் வளர்ந்து வசனத்தின்மீது விருப்பம் ஏற்பட்டாலும், உண்மையான அன்பு குறைவாயிருக்கலாம். அதற்கு பெற்றோர் நல்மாதிரியாயிருக்க வேண்டும். அவர்கள் வசனத்திற்குக் காண்பிக்கும் பரிவான அன்பு பிள்ளைகள் வேதவசனத்தை நேசிக்க பெருந்தூண்டுதலாயிருக்கும்.

வசனத்திற்கு கீழ்ப்படிதல்

வசனத்தை விசுவாசித்தல், அறிந்து கொள்ளுதல், அன்பு கூருதல் ஆகியவற்றோடு கீழ்ப்படிதல் நமது உத்தமத்திற்கு பரிசோதனையாயிருக்கும். தேவன் கட்டளையிட்டவைகளை அவர்களுக்குப் போதிப்பதோடு நீங்களும் மாதிரியாயிருங்கள். இந்த நாட்களில் தேவனுடைய கட்டளைகள் கடின மானவை என்றும், முழுமையான கீழ்ப்படிதல் மகிழ்ச்சி தருவது கேள்விக் குறியானது என்றும் கருதப்படுகிறது. ஆனால் வேதபுத்தகம் நம்மைக் கட்டுப் படுத்தி வைக்கும் ஒரு சட்ட புத்தகமல்ல. நாம் விரும்புவதைச் செய்யாவிட்டால், கடின பாரத்தை செய்ய நம்மைக் கட்டாயப்படுத்துவதுமல்ல. இதை பிள்ளைகள் உணர்ந்து வசனத்திற்குக் கீழ்ப்படிய வழிநடத்தப்பட வேண்டும். பிதாவினால் மீட்கப்பட்டவர்களாகிய நாம் அவருடைய உடன்படிக்கைக்கும், ராஜ்யத்திற்கும் பங்குள்ள பிள்ளைகள். எனவே "என் தேவனே உமக்குப் பிரிய மானதைச் செய்ய விரும்புகிறேன். உமது நியாயப் பிரமாணம் என் உள்ளத்திற்குள் இருக்கிறது என்று சொன்னேன்" சங்.40:8 என்று சொல்வோம். இது நம்மிலும் நமது பிள்ளைகளிலும் கிரியை செய்ய வேண்டிய அவரது உடன்படிக்கையின் வாக்கு. கிறிஸ்து இயேசுவுக்குள் தேவ பிள்ளைகளுக்குரிய சுயாதீனத்தை பெறுகிறோம். நமது பிள்ளைகள் நம் மூலமாக வேதவசனத்தை வாசித்து அதன்படி செய்யாமலிருப்பது கூடாத காரியம் என அறிந்துகொள்வர். பிள்ளை களோடு சேர்ந்து நாம் வேதபுத்தகத்தைப் படிப்பதும் தேவனை அறிந்து கொள் வதும் அவரது சித்தம் செய்வதாகும்.

கவனமாகவும் கருத்துடனும் வாசிக்கட்டும்

உணவை சரியான நேரத்துக்கு ஆயத்தம் பண்ணிவிட்டு பிள்ளைகளை உட்கார வைத்து அவரவது தேவைக்கு ஏற்றபடி பரிமாறுவதுபோல தேவ வசனத்தைப் பிள்ளைகள் சந்தோஷமாக ஏற்றுக்கொள்ளும்படி ஊட்ட வேண்டும். குடும்ப கூடுகையின் போது அவர்களை ஆண்டவருக்கு முன்பாகக் கொண்டு வந்து ஒவ்வொருவருடைய தேவைக்கு ஏற்ப பரம மன்னாவைப் பகிர்ந்தளிக்க வேண்டும். பிள்ளைகளுக்கு அந்த நாள் ஆசீர்வாதமாயிருக்கும். பிள்ளைகளோடு சேர்ந்து வேதத்தை வாசிக்கும்போது அவர்கள் தேவசமூகத்தில் உட்கார்ந் திருப்பது போன்ற உணர்வு ஏற்படும். துரிதமாக வேதபுத்தகத்தை வாசித்து கடந்து செல்ல வேண்டாம். சில வினாடிகள் அமைதியாயிருந்து தேவன் பேசுவதை கவனமாகக் கேட்கவும் அதை செயல்படுத்தவும் பிள்ளைகளை உற்சாகப்படுத்துவது பெரிய ஆசீர்வாதங் களுக்கு ஆரம்பமாயிருக்கும்.

ஆவியானவர் கிரியை செய்ய அனுமதிக்க வேண்டும்

வேதவசனம் நமது பிள்ளைகள் பரமபிதாவிடமிருந்து பெற்றுக் கொள் ளும் சுதந்தரம். அதன் பொக்கிஷங்களை அறிந்துகொள்ளவும், சொந்தமாக்கிக் கொள்ளவும் நீங்கள் கட்டளை பெற்ற வர்கள். ஜெபத்தோடு ஞானமாக செயல் படுங்கள். தமது வாக்குத்தத்தங்களை அருளிய ஆண்டவர் "நீங்கள் என்னிலும், என் வார்த்தைகள் உங்களிலும் நிலைத் திருந்தால் நீங்கள் கேட்டுக் கொள்வ தெதுவோ அது உங்களுக்குச் செய்யப் படும்". யோவா.15:7 என்றார்.

உங்கள் வாழ்வு மாயமற்ற விசுவாசமுடையதாகவும், தேவ வசனத் திற்குக் கீழ்ப்படிய விருப்பமுடைய தாகவுமிருந்தால் அது உங்கள் பிள்ளை களிலும் கடந்து செல்லும். இந்த உறுதி வேத வசனத்திலிருந்து வல்லமையாக வெளிப்பட்டு, பிள்ளைகள் அதனை உணரும்படி செய்யும். ஒருவேளை வசனத்தை சரியாகப் போதிக்க உங்க ளுக்கு தெரியாமலிருந்தாலோ அல்லது ஏதேனும் தடைகள் பிள்ளைகளிலிருந் தாலோ அமைதியுடனும் மகிழ்ச்சியுடனு மிருங்கள். தேவன் அந்த பணியை பொறுப்பெடுத்துக் கொள்வார். ஜெபத் தோடு ஆவியானவரின் உதவியை நாடுங்கள்.

மகிமையின் தேவனே, பெற்றோ ராக உமது வசனத்தை எங்கள் பிள்ளை களுக்கு பகிர்ந்தளிப்பதில் எங்கள் பங்கை நிறைவேற்ற ஆழமான உணர்வைத் தாரும். பரிசுத்த வேத எழுத்துக்களை தீமோத்தேயுவுக்குக் கொடுக்க ஏதுவா யிருந்த முன் சந்ததியாரின் மாயமற்ற விசுவாசத்தை எங்களுக்குத் தாரும்.

உமது ஆசீர்வாதமான வசனத்தி லுள்ள ஆழமானதும் முழுமையானது மான வல்லமை பிள்ளைகளில் வளரட் டும். உமது வார்த்தைகளால் அவர்கள் இருதயம் நிரப்பப்படுவதால் அவை அவர்களில் தூய எண்ணங்களும், செயல் களும் எழும்ப நல்ல விதைகளாயிருக் கட்டும்.

எங்கள் பிள்ளைகளுக்கு ஒவ்வொரு நாளும் வேத வசனங்களைப் போதிக்க உமது ஞானம், விசுவாசம், பொறுமை உத்தமம் ஆகியவற்றை இரக்கமாய்த் தாரும். நாங்கள் எங்களை உமது பரிசுத்த வசனத்தின் மேன்மைக் கும் வல்லமைக்கும் அர்ப்பணிக்கிறோம். அதனால் எங்கள் வாழ்வு தூய ஒளியினை வீசட்டும். நாங்கள் விசுவாசமும், அன்பும், கீழ்ப்படிதலும் உள்ளவர்களா யிருப்பதால் எங்கள் பிள்ளைகளும் சிறுவயதிலிருந்தே அவற்றைக் கற்றுக் கொள்ளட்டும்.

இதுவரை எங்களில் காணப் பட்ட குறைகளுக்காக வருந்துகிறோம். உமது பலத்த வல்லமையால் நிறைவான பாதையில் எங்களை நடத்துவீராக. ஆமென்.

- **அவர் வெறுமழையை அனுப்பியிருக்கும் போது துளிகளைக் கேட்கவேண்டாம்.**
- **ஒவ்வொரு தனி மனிதனுக்கும், மனுஷிக் கும், குழந்தைக்கும், ஒட்டு மொத்த குடும்பத்திற்கும் தேவன் வைத்திருக்கும் திட்டம் தாழ்மை என்றால் தவறல்ல.**
- **விசுவாசமுள்ள பெற்றோர், தங்கள் பிள்ளைகளுக்கு தேவ வசனத்தைப் பகிர்ந்தளிப்பது தேவன் அவர்களுக் களித்த மேன்மையான கனமாகும்.**

நமது தோல்வியின் இரகசியம் நாம் தேவனைப் பார்ப்பதற்குப் பதிலாக மனிதரைப் பார்க்கிறோம். மார்ட்டின் லூதர் தேவனை சந்தித்தபோது ரோம மார்க்கம் நடுங்கியது. ஜோனத்தான் எட்வர்ட்ஸ் தேவனை தரிசித்தபோது மிகப்பெரிய உயிர்மீட்சி ஏற்பட்டது. ஜான் நாக்ஸ் தேவனைக் கண்டபோது ஸ்காட்லாந்து முகங்குப்புற விழுந்து தேவனைப் பணிந்தது. ஜாண் வெஸ்லி தேவனை நோக்கிப் பார்த்தபோது உலகம் முழுவதும் ஆராத னைக் கூடமாயிற்று. ஜார்ஜ் முல்லர் தேவனை தரிசித்தபோது ஆயிரக்கணக் கான அனாதைகள் போஷிக்கப்பட்டனர். அதே மாறாத தேவன் இன்றும் ஜீவிக்கிறார்.

ஒப்படைப்பு

Dedication

F.B. Meyer

எனது அந்தரங்க வாழ்வில் நான் முற்றிலும் பரிசுத்தமாகவும் அழகாகவும் காக்கப்பட விரும்புகிறேன்.

பரிசுத்தமானவரும், கறையற்ற வருமே, என்னில் பரிசுத்தத்தின் பளிங்கைப் போன்ற நீரூற்றாய் இருப்பீராக.

தேவ ஆட்டுக்குட்டியே, நீர் என்னில் முற்றிலும் சாந்தமும் தாழ்மையும் ஏற்படக் காரணமாயிரும்.

மனிதரை நேசிக்கிறவரே, என்னில் குன்றாததும் எல்லாவற்றையும் சகிக்கிறதுமான உருக்கமாயிருப்பீராக.

என்னிலிருக்கிற அசுத்தம், இரக்கமற்ற தன்மை ஆகியவற்றை உடனுக்குடன் உணரச்செய்யும். அவை உருவெடுத்து வளருமுன் உம்மில் அடைக்கலம் தேட உதவி செய்யும்.

எனது இவ்வுலக வாழ்வின் நாட்கள் இருளாயிருக்கும்போது நான் ஒளியாயிருந்து மற்றவர்களுக்கு ஆசீர்வாதமாயிருக்கட்டும். நாட்கள் துக்கமான வைகளாகவும் நம்பிக்கையற்றவைகளாகவும் இருக்கும் போது நான் ஒரு தூண்டுதலாகவும் வேதனையும், கண்ணீரும் நிறைந்த நாட்களில் நான் ஆறுதலாகவும் இருக்கச் செய்யும்.

என்னைக் குறித்து சிந்திப்பதற்கு முன்னதாக பிறரைக் குறித்து நான் சிந்திக்கவும், எனது தனிப்பட்ட துக்கங்களை எரிகிற விளக்கோடும், இடைகட்டப்பட்ட நிலையிலும், கழுகப்பட்ட முகத்தோடும், அபிஷேகிக்கப்பட்ட தலையோடும் கடந்து செல்லவும் உம்மையே சார்ந்து கொள்ளவும் உதவி செய்யும்.

எனது மார்க்க வாழ்வில் ஜெபம் உதாசீனப்படுத்தப்படாமலும் வேத வாசிப்பு நிரந்தரமாகவும் இருப்பதாக. அதிகாலையில் உமது சீஷனாக என்னை விழிக்கச்செய்யும். நீர் அழைக்கும்போது உடனே நான் குரல் தரட்டும். உமது உத்தம ஊழியக்காரனாக வெயிலில் உருகுமுன் மன்னாவை நான் எழுந்து சேகரிக்கட்டும்.

உம்மோடுள்ள உறவு ஒரு போதும் துண்டிக்கப்படாமல் இருப்பதாக. உம்மோடு பேச முடியாவிட்டால் அடிக்கடி உமது முகத்தை நோக்கிப் பார்ப்பேனாக. என்னை இழுத்துக் கொள்ளும், அப்பொழுது உமக்குப் பின்னாக ஓடுவேன்.

ஒவ்வொரு நிமிடமும் என்னை உலகிலிருந்து தூரப்படுத்தி உமது அழைப்புக்கு மட்டும் என் ஆத்துமா காத்திருக்கச் செய்யும். எனது அனுதின அழைப்பின் பணியில் ஜாக்கிரதையாயிருக்கவும் அன்பில் உற்சாகப்படவும் ஆண்டவரை உண்மையாக சேவிக்கவும் வழிநடத்தும். நான் பெறும் ஊதியத்திற்காக அல்லது முன் உதவி பெற்றுக் கொள்வதற்காக அல்ல, உம்மைப் பிரியப்படுத்த மட்டுமே எனது பணியைச் செய்வேனாக.

எனது அனுதின வாழ்வு, உழைப்பு யாவும் உமது மகிமையை மட்டும் நோக்குவதாக. எனது பணி மனிதனைப் பிரியப்படுத்த அல்ல, இருதயத்தை ஒருமுகப்படுத்தி, ஆண்டவருக்குப் பயந்து தேவசித்தத்தை நிறைவேற்றுவதாக இருக்கட்டும். தெய்வீக எஜமானே உமது வெகுமதியை மட்டும் நான் எதிர்பார்க்கட்டும் *1 கொரி.10:31.*

பணத்தைச் செலவு பண்ணும் போது நீர் எனக்கு தந்தவைகளை எனது வருங்காலத்தைக் குறித்து கவலை கொண்டு சேமித்து வைக்காமலிருப்பேனாக, நான் என்னை உமது அடிமையாகவும் எனக்குரியவைகளை யெல்லாம் நீர் கிரயம் கொடுத்து வாங்கியவை என்றும் கருதி அவற்றை யெல்லாம் உமது ஸ்தானாபதியாகவும், உக்கிராணக் காரனாகவும் செலவு செய்வேனாக.

எனது சமயம், ஆரோக்கியம், வாய்ப்பு வசதிகள் எல்லாவற்றையும் பயபக்தியோடு செலவு பண்ணுவேனாக. காலத்தை ஆதாயம் பண்ணவும் வாய்ப்புகளை பயன்படுத்தவும் கிருபை தாரும். எனது உடலை பரிசுத்த ஆவியானவர் தங்கும் ஆலயமாகக் காத்துக்கொள்ள உதவி செய்வீராக. நீர் என்னை சிருஷ்டித்து மீட்டுக்கொண்ட நோக்கத்தை நிறைவேற்றுவேனாக. அனைத்து வகையான பொழுது போக்குகளையும் ஒதுக்கி விடுவேனாக.

எனக்கு நீர் என்னென்ன தாலந்துகளை தந்திருக்கிறீரோ அவற்றை எனக்குக் காண்பியும். அவற்றை நான் பன்மடங்காக்க பெலன் ஞானம் தாரும் *மத்.25:14-30.*

இப்போதும் என்னை நீர் ஆசீர்வதிப்பீராக. ஆண்டவரே! உலகம் உண்டாவதற்கு முன்னாலேயே உமது பிதா என்னை உமக்குத் தந்துவிட்டார். நீர் என்னை உமது விலையேறப்பெற்ற இரத்தமாகிய கிரயத்தால் வாங்கி விட்டீர். உமது தூய ஆவியால் ஒரு நற்கிரியையை என்னில் ஆரம்பித்து விட்டீர்.

இப்போதும் மறுபடியும் என்னை உமது இருதயத்திற்குள் எடுத்துக் கொள்ளும். உமது ஆவியால் என்னை முத்திரை போடும். அவர் என்னைப் பிரகாசிக்கப்பண்ணி ஆறுதல்படுத்தி, சுத்திகரித்து, ஜெபிக்கவும் கற்றுத் தருவாராக. எனது இருதயக் கண்களைத் திறந்து உம்மையும், உமது உயிர்த்தெழுதலின் வல்லமையையும் கண்டு கொள்ளச் செய்வாராக. நீர் பரலோகத்தில் எழுந்தருளியிருக்கிறீர். நானும் என் இருதயத்தாலும், உள்ளத்தாலும் அங்கு ஏறிவரட்டும். உம்மோடு நான் நித்தியமாக வாழட்டும். நீர் பிதாவோடும், தூய ஆவியோடும் ஜீவித்து முடிவின்றி அரசாளுகிறவர். ஆமென்.

நமது பிள்ளைகளின் வாழ்வில் விதைப்பதும் அறுப்பதும்

Sowing and reaping in our children's life

D.L.Moody

அன்பு பெற்றோரே, உங்கள் குடும்பத்தில் எப்படிப்பட்ட விதையை விதைக்கிறீர்கள்? உங்கள் பிள்ளைகளுக்கு எத்தகைய மாதிரியைக் காண்பிக்கிறீர்கள்? தேவனுக்காகவும் அவருடைய நீதிக்காகவும் அவர்களைப் பயிற்சிக்கிறீர்களா?

எனது மகனிடம் மார்க்கத்தைப் பற்றியே பேசமாட்டேன், அவன் வளரும்போது தானே ஒரு மார்க்கத்தைத் தெரிந்துகொள்ளட்டும் என்று மனிதன் கூறினானாம். ஒரு நாள் அந்த மகன் கால் இடறி கீழே விழுந்து அவனது ஒரு கை எலும்பு முறிந்துவிட்டது. மருத்துவர் அதற்கு கட்டுப்போட்டுக் கொண்டிருந்த போது அவன் முழுநேரமும் சபிப்பதும் தூஷிப்பதுமாயிருந்தான்.

மருத்துவர் அவன் தந்தையிடம் 'உமது பிள்ளையை நீர் சரியான பாதையில் நடத்தவில்லை, அதில் நீர் தவறினபடியால் சாத்தான் அவனைத் தவறான பாதையில் நடத்திவிட்டான்' என்றார். இயற்கை ஒருபோதும் நன்மையை வளரச் செய்வதில்லை. அது களைகளைத்தான் முளைப்பிக்கும்.

ஒரு கவிஞரின் நண்பர் ஒருவர் வாலிப உள்ளங்களில் நற்காரியங்களைப் போதிக்க வேண்டும் என்ற கருத்தை ஒப்புக்கொள்ள மறுத்தார். ஒரு நாள் கவிஞர் அந்த நண்பனைத் தனது தோட்டத்திற்கு அழைத்துச் சென்று அதனை காண்பித்தார். ஓரிடத்தில் அழகும் மணமுமற்ற செடிகள் கூட்டமாக வளர்ந்து நின்றன. "இது ஒரு தோட்டமா?" என்று நண்பன் வியக்க, கவிஞர் "இந்தப் பகுதியை ரோஜா மலர்களும், லீலி மலர்களும் நிறைந்த தோட்டம் என்று சொல்ல முடியுமா? அது தவறுதானே" என்று பதிலளித்தார்.

நமது இருதயமும் உள்ளமும் இவ்வாறாகவே காணப்படுகின்றன. ஒரு பிள்ளை சோம்பலாயிருக்கும்போது சாத்தான் அதனைத் தவறான வழிகளிலே நடத்துகிறான். எனவே அது நன்கு பராமரிக்கப்பட வேண்டும். நற்குணங்களைத் தெரிந்தெடுத்து போதிக்க வேண்டும். வேண்டாதவைகளைப் பிடுங்கி எறிய வேண்டும்.

ஒரு நாள் ஒரு தந்தை தனது அலுவலகத்திற்குக் காலையில் புறப்பட்டார். வெளியில் பனி பெய்து கொண்டிருந்தது. திரும்பிப் பார்த்த அவர் தனது இரண்டு வயது குழந்தை

(7-ம் பக்கம் பார்க்க)

(6-ம் பக்க தொடர்ச்சி)

தனது காலடிகளில் சிறிய கால்களைப் பதித்துத் தொடர்ந்து வருவதைக் கண்டார். சிறுவன் அப்பாவை அழைத்து, "அப்பா நீங்கள் முன்னால் போங்கள், நான் உங்கள் காலடிகளில் தொடர்ந்து வருகிறேன்" என்றான். தந்தை மகனை கரங்களில் எடுத்து அதன் தாயிடம் ஒப்படைத்து விட்டு மறுபடியும் அலுவலகம் சென்றார்.

அவர் வழக்கமாக ஒரு மதுபானக் கடையில் நின்று ஒரு குவளை மதுபானம் குடிப்பது வழக்கம். அன்று அவர் வாசற்படியில் நின்றபோது ஒரு இனிய குரல், 'அப்பா நீங்கள் முன்னாலே போங்கள், நான் உங்கள் காலடிகளில் தொடருகிறேன்' என்று ஒலித்தது. அதிர்ச்சியடைந்து அங்கேயே நின்று விட்டார். "இப்படி ஒரு பாதையை என் காலடிகளால் என் மகனுக்கு ஏற்படுத்தியதற்காக வெட்கப்பட்டு வருந்துகிறேன்" என்று கூறி நல்ல தீர்மானத்துடன் திருந்தினார்.

தந்தையே, தாயே உங்கள் பாதை சரியானதா? அது நேரானதா? "நான் கிறிஸ்துவைப் பின்பற்றுவது போல் நீங்கள் என்னைப் பின்பற்றுங்கள்" என்று பவுல் சொன்னது போல நமக்குப் பின்னால் வருகிறவர்களிடம் நாம் சொல்லமுடியுமா? சிறுபிள்ளைகளை பெரிய மேய்ப்பரிடம் வழிநடத்துவோம்.

சாத்தான் களைகளை விதைக்கு முன், நாம் நல்ல விதைகளை விதைக்க வேண்டும். இதற்கான எச்சரிப்புகளை தேவன் நமக்குத் தந்திருக்கிறார். 'முதலாவது தேவனுடைய ராஜ்யத்தையும் அவருடைய நீதியையும் தேடுங்கள்' *மத்.6:33.*

"பிள்ளையானவன் நடக்க வேண்டிய வழியில் அவனை நடத்து" *நீதி.22:6.* "..... உங்கள் பிள்ளைகளைக் கோபப்படுத்தாமல் கர்த்தருக்கேற்ற சிட்சையிலும் போதனையிலும் வளர்ப்பீர்களாக" *எபேசி.4:6.* பயிரிட வேண்டிய காலத்தில் விவசாயி பயிரிடாவிட்டால் அவன் தன் வாய்ப்பை இழந்துவிடுவான். அதுபோல உங்கள் பிள்ளைகளையும் சரியான காலத்தில் நீங்கள் கவனிக்காவிட்டால் வாய்ப்பை இழப்பீர்கள். வாலிபம் விதைப்பதற்கு ஏற்ற பருவம். அப்போது நல்ல விதைகள் விதைக்கப்படாவிட்டால் களைகள்தான் வளரும். களைகளை அகற்றுவது மிகக் கடினம்.

ஒரு விவசாயி தன் வயல் நிலத்தில் ஒரு களையைக் கண்டால் உடனே அதனைப் பிடுங்கிஎறிவான். ஆரம்பத்திலேயே அதனைப் பிடுங்கி எறிந்து விட்டால் அவ்விடத்தில் பயிர் வளர இடமுண்டாகும். அது நீண்ட காலம் பிடுங்கப்படாவிட்டால் அது பிடுங்கப்பட்ட பின் அந்த இடம் வெறுமையாயிருக்கும். எனவே களைகளை வளர விடாமல் ஆரம்பத்திலேயே எச்சரிக்கையாயிருக்க வேண்டும்.

பூட்டிய எந்த ஒரு ஜெப அறையும் தேவனின் ஆசீர்வாதங்கள் குவிந்திருக்கும் சேமிப்புக் கிடங்கு.

அமர்ந்திருப்பதின் வல்லமை

The power of silence

A.B.Simpson (1843-1919)

சில ஆண்டுகளுக்கு முன் ஒரு நண்பர் 'உண்மையான சமாதானம்' என்ற ஒரு நூலை எனக்குக் கொடுத்தார். அது என் வாழ்வில் ஒரு திருப்பு முனையை ஏற்படுத்தியது. அதில் கூறப்பட்ட முக்கிய கருத்து, தேவன் என் உள்ளத்தின் ஆழமான பகுதியிலிருந்து என்னோடு பேசக் காத்திருக்கிறார். மற்றும் நான் அவருடைய மெல்லிய சத்தத்தைக் கேட்க அமர்ந்திருந்தால் மட்டுமே அதனைக் கேட்க முடியும் என்பதுமாகும்.

அமைதலுக்கு சவால்

அமைதலாயிருப்பது மிகவும் எளிது என்று எண்ணிய நான் அமைதலாயிருக்க ஆரம்பித்தேன். உடனே ஏராளமான குரல்கள் எனக்குள்ளிருந்தும், வெளியேயிருந்தும் ஒலித்தன. அவற்றில் சில எனது கேள்விகளாகவும், சில எனது கவலைகளாகவும் இன்னும் சில எனது ஜெபங்களாகவுமிருந்தன. சோதனைக்காரரின் ஆலோசனைகளும் உலகத்தின் குழப்பங்களால் ஏற்பட்ட ஒலிகளும் எழும்பின. இதற்கு முன்பு இத்தகைய ஒலிகளை எழுப்பியதோ, கேட்டதோ, எண்ணியதோ இல்லை. இவைகளால் நான் எல்லா திசைகளிலும் இழுக்கப்பட்டு தள்ளப்பட்டு விவரிக்க முடியாத நிலைக்குள் ஆனேன். ஏதேனும் ஒரு குரலை மட்டும் கவனித்து அதற்குப் பதிலளிப்பது அவசியம் என்று எனக்குத் தோன்றியது. ஆனால் தேவன் என்னிடம் "நீங்கள் அமர்ந்திருந்து நானே தேவன் என்று அறிந்து கொள்ளுங்கள்" *சங்.46:10* என்றார்.

அமைதலின் தேவன்

பின்பு அந்த நாளுக்குரிய கடமைகள், செயல்பாடுகள் போன்ற எண்ணங்கள் போட்டியிட்டு எழுந்தன. ஆனால் தேவன் 'அமர்ந்திரு' என்றார். அதனை கவனித்த நான் மெதுவாகக் கீழ்ப்படியக் கற்றுக்கொண்டேன். அனைத்துப் பிற ஒலிகளுக்கும் செவிகளை அடைத்துக்கொண்டேன். அந்த ஒலிகளை நான் கவனிக்காமல் விட்ட போது அவை நின்று போயின. ஒரு மெல்லிய குரல் மட்டும் என் இதயத்தின் ஆழங்களிலிருந்து பேச ஆரம்பித்தது. அது விவரிக்க முடியாத பரிவும், வல்லமையும், ஆறுதலும் நிறைந்ததாயிருந்தது. நான் அதை கவனித்தபோது அது ஜெப சத்தமும், ஞானம் நிறைந்ததும், கடமை உணர்வுடையதுமாயிருந்தது. அந்த அமர்ந்த மெல்லிய குரல் என் அந்தரங்க ஆத்துமாவில் தூய ஆவியானவர் ஜெபித்த தேவனுடைய ஜெபம் என்றும், எனது கேள்விகளுக்கெல்லாம் தேவன் கொடுத்த பதில் என்றும் கண்டு கொண்டேன். மட்டுமின்றி அது எனது ஆத்துமாவுக்கும் சரீரத்திற்கும் தேவன் கொடுத்த ஜீவனும், வல்லமையுமாயிருந்தது. மேலும் என் அறிவுகளுக்கெல்லாம் ஆதாரமாகவும், ஆசீர்வாதங்களுக்கெல்லாம் காரணமாகவுமிருந்தது. ஜீவனுள்ள தேவன் எனக்கு எல்லாவற்றிற்கும் எல்லாமாக ஆகிவிட்டார்.

அமர்ந்திருப்பதின் பாதை

நாம் அமர்ந்திருப்பது தேவன் கிரியை செய்ய இடமளிக்கிறது. நமது பணி ஓயும்போது தேவன் கிரியை நடப்பிக்கிறார். நம் நினைவுகள் முடிவுறும் போது தேவனுடைய நினைவுகள் நம்மில் வருகின்றன. "அவருடைய இளைப்பாறுதலில் பிரவேசித்தவன் தேவன் தம்முடைய கிரியைகளை முடித்து ஓய்ந்ததுபோல தானும் தன் கிரியைகளை முடித்து ஓய்ந்திருப்பான்" *எபி.4:10.* "தேவனே தம்முடைய தயவுள்ள சித்தத்தின்படி விருப்பத்தையும் செய்கைகளையும் உங்களில் உண்டாக்குகிறவராயிருக்கிறார்" *பிலி.2:13.*

இன்னொருவிதமான அமர்ந்திருத்தல் தேவன் நமக்கு அளிக்கும் சமாதானமாகும். அது நமது புத்திக்கு அப்பாற்பட்டது. சத்துரு எதிர்த்து வரும் போது தேவன் தமது மாறாத உத்தம அன்பினால் பதிலளிக்கட்டும் என்றிருக்கும் அமைதல் இது.

ஆண்டவராகிய இயேசுவின் அமைதலை கவனிப்போம். அவரை நிந்தித்தவர்களுக்கு அவர் பதிலளிக்க வில்லை. தெய்வீக வல்லமையால் பகைவர்களைக் கவிழ்த்துப் போடாமலும் கடிந்து கொள்ளாமலும் அமைதலுடன் நின்றார். அவர் தேவனுடைய பரிசுத்த ஆட்டுக்குட்டி.

தேவன் தாமே இந்த அமர்ந்த வல்லமை, உறுதியான சுய அர்ப்பணம், மேற்கொள்ளும் ஆவி ஆகியவற்றால் நம்மை முற்றிலும் ஜெயங்கொள்ளுகிறவர்களாக மாற்றுவாராக. நமது குரலும் வாழ்வும் ஓரேபிலே தேவன் பேசினது போல 'மெல்லிய அமர்ந்த குரலாக' ஒலிக்கட்டும். பின்பு குழப்பங்கள் பூமியிலிருந்து ஓய்ந்து போகும். மக்கள் காலை பனித்துளியையும், சூரியனின் ஒளிக்கதிரையும் தொடர்ந்து மாலை தென்றலையும், கல்வாரியின் தேவாட்டுக் குட்டியையும், பரிசுத்த பரலோக புறாவையும் தரிசிப்பார்கள்.

எழுப்புதலுக்காக ஜெபித்திடு!
எழுப்புதலுக்காக பிரசங்கித்திடு!

தர்மபுரி மாவட்டத்தில்

எழுப்புதலுக்காக இதய கதறல்

(7 மணி நேர உபவாச ஜெபம்)

காலம் : **11-06-2022** சனிக்கிழமை
காலை 10 மணி – மாலை 5 வரை

இடம் : **இம்மானுவேல் பெந்தெகொஸ்தே சபை,** கடத்தூர், தருமபுரி

செய்தி : சகோதரன் **வெஸ்லி தேவதாசன்**

ஜெபம் : **NIMS மிஷனெரிகள்,** குஜராத்
IEM மிஷனெரிகள், தமிழ்நாடு

தொடர்பு: **வருகையின் தூதன்**
மொபைல் : 9543221008

(2-ம் பக்க தொடர்ச்சி)

உயிர்ப்பிக்கப்பட முடியாது. வசனம் இருதயத்திற்கும், சித்தத்திற்கும், நமது அன்புக்குமுரியது. வசனத்திற்கு நம்மை அர்ப்பணிக்க வேண்டும். அதன்படி வாழ வேண்டும். அப்போதுதான் வசனம் ஜீவனுள்ளதும் உயிர்ப்பிக்கிறது மான தனது வல்லமையை வெளிப் படுத்தும்.

"தேவனுடைய வார்த்தை யானது ..... இருதயத்தின் நினைவு களையும், யோசனைகளையும் வகை யறுக்கிறதாயும் இருக்கிறது" எபி.3:8-15. வசனங்களில் கடின இருதயம், வழுவிப் போகிற இருதயம், பொல்லாத இருதயம் என்ற இருதயங்களைக் குறித்துப் படிக்கிறோம். தொடர்ந்து பின்பு இதே நிருபத்தில் தேவனுடைய பிரமாணங்கள் எழுதப்பட்ட இருதயம், உண்மையுள்ள இருதயம், இரத்தம் தெளிக்கப்பட்ட இருதயம், கிருபை யினால் ஸ்திரப்படுத்தப்பட்ட இருதயம் போன்ற இருதயங்களைக் குறித்தும் வாசிக்கலாம் (எபி.8:10, 10:22, 13:9) இருதயம் மாற்றப்படக்கூடியது. "இன்று அவருடைய சத்தத்தைக் கேட்பீர்களாகில் ..... இருதயத்தைக் கடினப்படுத்தா திருங்கள்" எபி.3:7,8,15 என்பது தேவனுடைய வேண்டுகோள். தேவ வசனத்தால் ஆராய்ந்து பார்க்கப் பட ஒப்புக் கொடுக்கப்படும் இருதயம் அதிலுள்ள இரகசிய எண்ணங்களும், விருப்பங்களும் நியாயந்தீர்க்கப்பட்டு, தவறு செய்வதிலிருந்தும், அவிசுவாசத் திலிருந்தும் விடுவிக்கப்பட்டு, உயிர்ப் பிக்கப்பட்டு, சுத்திகரிக்கப்பட்டு தேவன் தமது வசனத்தை எழுதக்கூடிய பலகை யாக மாற்றப்படும். எனவே வசனத்தால் நியாயந்தீர்க்கப்பட நமது இருதயத்தை அர்ப்பணிப்பது இன்றியமையாததும், ஆசீர்வாதமானதுமாகும்.

தேவனுக்கும் அவரது வார்த்தைக்கும் நம்மை ஒப்புவித்தல்

"அவருடைய பார்வைக்கு மறைவான சிருஷ்டி ஒன்றுமில்லை. சகலமும் அவருடைய கண்களுக்கு முன்பாக நிர்வாணமும், வெளியரங்க மாயுமிருக்கிறது. அவருக்கே நாம் கணக்கு ஒப்புவிக்க வேண்டும்" எபி.4:13. தேவனுடைய வார்த்தையில் அவரது பண்பு வெளிப்படுகிறது. அவர் எல்லா வற்றையும் அறிகிறவர். அவருடைய வார்த்தையின் தீர்ப்புக்கு எவருமே தப்ப முடியாது. நாம் கணக்கு ஒப்புவிக்க வேண்டிய தேவனைக் குறித்து "ஜீவனுள்ள தேவனுடைய கைகளில் விழுவது பயங்கரமாயிருக்குமே" என்று எபி.10:31-ல் வாசிக்கிறோம். மேலும் "நம்முடைய தேவன் பட்சிக்கிற அக்கினியாயிருக்கிறாரே" 12:29.

சந்தோஷத்துடனே நாம் நம்மை அவருக்கு அர்ப்பணிப்போம். சரிப்படுத்த வேண்டிய ஏதேனுமிருந் தால் சரிப்படுத்துவோம். தேவன் தமது வசனத்தின் மூலம் நம்மை விழிப் படையச் செய்யட்டும். அது உங்கள் தவறை உங்களுக்கு காண்பிக்கட்டும். பயப்பட வேண்டாம். மருத்துவர் கையிலுள்ள கத்தி சுகப்படுத்தவே காயப்படுத்தும். உங்கள் தவறுகளை யும், பாவங்களையும் காண்பிக்கும் ஒளி, அவற்றிலிருந்து உங்களை வெளியேற்று வதும் திண்ணம். ஜீவனுள்ள வசனம் உங்களுக்கு ஜீவனை அளிக்கும்.

தேவன் தமது குமாரன் மூல மாகப் பேசியிருக்கிறார் என்பது எபிரேயருக்கு எழுதப்பட்ட நிருபத் தின் திறவுகோல். அவரது சத்தம் கேட்கும் நாம் இருதயத்தைக் கடினப் படுத்த வேண்டாம். வசனத்தைக் கேட்டுக் கீழ்ப்படிந்து நம்மை ஆண்ட வருக்கு அர்ப்பணிப்போம். கீழ்ப்படி தல் மூலமாக ஆசீர்வாதங்களைப் பெறலாம்.

உங்கள் இருதயமோ, சபை யோ, கிறிஸ்தவ உலகமோ சொல் வதைக் கேட்டு உங்கள் வாழ்வை நிதானிக்க வேண்டாம். எல்லாவற் றையும் தேவனுக்கு முன்பாகத் திறந்து அளியுங்கள். அவர் எல்லாவற்றையும் கவனிக்கிறார்.

ஜீவ வசனமாகிய தேவன் தாமே தூய ஆவியால் நம்மில் கிரியை செய் வதை உறுதிப்படுத்திக் கொள்ளுங்கள். வசனம் அதில் வாசமாயிருக்கும் ஜீவனுள்ள தேவனை சுட்டிக் காண் பிக்கிறது. ஜீவனையும் தேவனையும் தேடுகிற இருதயத்தில் அது ஜீவனுள்ள வார்த்தையாக வாசம் பண்ணும்.

அன்பு கூராமல் கொடுக்க முடியும், ஆனால் கொடுக்காமல் அன்பு கூர முடியாது.

ஜெபியுங்கள்! பங்குபெறுங்கள்!

எழுப்புதலுக்காக இதய கதறல்

(7 மணி நேர உபவாச ஜெபம்)

இடம் : **A.G.Church**
Near YMCA, Vettuvenni
Marthandam - 629 165. K.K.Dist.
Mobile : 98944 83982

நாள் : ***14.05.2022,*** *2-வது சனிக்கிழமை*

நேரம் : *காலை 10.00 மணி முதல்*
மாலை 05.00 மணி வரை

செய்தி : *சகோதரன்* **வெஸ்லி தேவதாசன்**

ஜெபம் : **NIMS மிஷனெரிகள்,** *குஜராத்*
IEM மிஷனெரிகள், *தமிழ்நாடு*

தொடர்பு : **வருகையின் தூதன்** *மொபைல் : 9543221008*

Contact:

VARUKAYIN THOOTHAN
7, Newport Street, W.C.C. Road,
Nagercoil - 629 001.
Kanyakumari District,
SOUTH INDIA.

Mobile: +91 095432 21008
Whatsapp: +91 094897 40295
email: varukayinthoothan@hotmail.com

சிந்தனைக்கு

நாம் கிறிஸ்துவோடு மரணத்திலும் உயிர்த்தெழுதலிலும் ஒன்றிணைக்கப் பட்டிருப்பதை உணரும் போது மட்டுமே **ஜெபம்** ஒரு மிகப்பெரிய விசை எனக் காண இயலும்.

தேவனுடைய **வார்த்தை** விதைக்கு ஒப்பானது. அதற்கு அளிக்கப்படும் முக்கியத்துவத்திற்கு ஏற்ப அதன் வளர்ச்சி ஏற்படும்.

வாலிபம் விதைப்பதற்கு ஏற்ற பருவம். அப்போது **நல்ல விதைகள்** விதைக்கப் படாவிட்டால் களைகள்தான் வளரும்.

நமது குரலும் வாழ்வும் ஓரேபிலே **தேவன்** பேசினது போல 'மெல்லிய அமர்ந்த குரலாக' ஒலிக்கட்டும்.

மருத்துவர் கையிலுள்ள **கத்தி** சுகப்படுத்தவே காயப்படுத்தும்.

உங்கள் இருதயமோ, சபையோ, கிறிஸ்தவ உலகமோ சொல்வதைக் கேட்டு உங்கள் **வாழ்வை** நிதானிக்க வேண்டாம்.

Printed and Published by Wesley Devadason and Printed at Varukayin Thoothan Offset Press and Published at 3/8, Newport Street, Nagercoil - 629 001.
Editor : Wesley Devadason